மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01–ம் நாள் திங்கட்கிழமை

அ.வ.எண்.23/18

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஞானேஸ்வரன் தேதி : 01.09.25
வயது : த/பெ : மலையாண்டி நாடார்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>01.09.25 குறுக்கு விசாரணை</u> **(6 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் உள்ளூரில் விவசாயமும் கோயம்புத்தூரில் வியாபாரமும் செய்து வருகிறேன். மாதத்திற்கு இரண்டு முறை கோயம்புத்தூரில் இருந்து ஊருக்கு வந்துவிட்டு செல்வேன். என் உடன்பிறந்தவர்கள் நான்கு பேர்கள். அவர்கள் 7 முதல் 10 பிரதிவாதிகள் ஆவர். என் தந்தை பெயர் N.S. மலையாண்டி நாடார். அவரின் தந்தை பெயர் சின்னக்கனி நாடார். சின்னக்கனி நாடாருக்கு என் தந்தையும், N.S. ராஜபாண்டி நாடாரும் வாரிசுகள். N.S. ராஜபாண்டி வாரிசுகள் 11 முதல் 19 பிரதிவாதிகள் ஆவர்.

2. 2 ம் பிரதிவாதி என் சின்ன தாத்தா பால்பாண்டி நாடாரின் மகள் அன்னலெட்சுமியின் 2 ம் மகனாவார். 2 ம் பிரதிவாதி உடன் பிறந்தவர்கள் 1, 3 முதல் 5 பிரதிவாதிகள் ஆவர். எனது பாகத்தை பிரித்து தர கோரி வழக்கு போட்டுள்ளேன். மலையாண்டி நாடார், சின்னக்கனி நாடார், ராஜபாண்டி நாடார் ஆகியோருக்கு இடையே தாவா சொத்தினை பொறுத்து பாகம் நடைபெறவில்லை. தபசில் சொத்தின் சர்வே எண் 54/56 G ஆகும். அதன் விஸ்தீரணம் 10.70 செண்ட் ஆகும். தாவா சொத்து சம்பந்தமாக பாகமாகவில்லை என்பதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் ஞாபகம் இல்லை. தாவா சொத்து புஞ்சை நிலமாகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 20:53:12 +0530

3. 20ம் பிரதிவாதி பிரிக்கப்படாத தாவா சொத்தினை பொறுத்து 2ம் பிரதிவாதியிடம் இருந்து பொது அதிகாரம் பெற்றவர் ஆவார். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் 2018 ல் ஜனவரியில் எழுதப்பட்டது. அந்த ஆவண எண் தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா கூட்டு பட்டாவாக உள்ளது. அது ராஜபாண்டி நாடார், பால்பாண்டி நாடார் மற்றும் மலையாண்டி நாடார் பெயரில் உள்ளது. அந்த பட்டாவினை தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா தாக்கல் செய்யாததால் தான் அதற்கான எண் தெரியவில்லை என்றால் சரியல்ல.

4. 20ம் பிரதிவாதி 22ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 6 செண்ட் ஆகும். அதில் எங்கள் குடும்பத்திற்கு ஏற்கனவே பாகமான 34 செண்டும் தாவா சொத்தும் சொந்தமானதாகும். 34 செண்டிற்கு மேற்கில் பாதை, கிழக்கில் பிரிக்கப்படாத தபசில் சொத்து, தென்பக்கம் மலையாண்டி நாடார் இடம், வடக்கில் தங்கையா நாடார் இடம் உள்ளது. எங்கள் குடும்பத்தில் தாவா சொத்தினை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகமாகிவிட்டது. எங்களது குடும்பத்தில் அனைத்து சொத்துக்களை பொறுத்தும் பாகப்பிரிவினை முடிந்துவிட்டது என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தினை பாகம் பிரிக்கவில்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் பனங்கொட்டை போட்டு அனுபவம் செய்துவருகிறேன். 2ம் பிரதிவாதி 20 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள அதிகார ஆவணத்தை படித்துப்பார்க்கவில்லை. அதில் என்ன சொல்லியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. 20ம் பிரதிவாதி 21 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 3 செண்ட் கிரைய ஆவணத்தை படித்துப்பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் என்ன சர்வே எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 54/56, என பொதுவாக கொடுக்கப்பட்டு கீழ்புறம் 17 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 20:53:18 +0530

6. தாவா சொத்து வாசனுக்கு வாய்மொழியாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாசனுக்கும் பாகம் உண்டு என்றால் ஆம். எவ்வளவு பாகம் என்றால் 3.5 செண்டில் 5ல் 1 பாகம் உண்டு. மோசடியாக பத்திரம் போட்டுள்ள விபரம் ஜனவரி 2018ல் தெரியும். இது தொடர்பாக வாசன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதுடன் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குற்ற வழக்கு எண் 70/2019 ஆகும். அது நிலுவையில் உள்ளது. எங்கள் ஊரில் இது சம்பந்தமாக சமரசம் பேசிப்பார்க்கவில்லை. தாவா சொத்தில் 6முதல் 10 பிரதிவாதிகள் மற்றும் 11முதல் 19 பிரதிவாதிகளுக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான்.

7. 2ம் பிரதிவாதி 20ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள பொது அதிகார ஆவணம் முழுவதும் செல்லத்தக்கதல்ல என்றால் சரிதான். 20ம் பிரதிவாதி 21, 22 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணங்கள் முழுவதும் செல்லத்தக்கதல்ல என்றால் ஆம்.

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

6முதல் 19 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 1ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

2 மற்றும் 20முதல் 24 பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.09.01 20:53:21 +0530